

February - 2011

# ஜோதி

ஆன்மிகச் செய்திச்சுடர்

JOTHI -Spiritual Letter

ஜோதி 4: சுடர் 12 - 48

## மூல மந்திரம்

ஓம் சக்தியே
பராசக்தியே
ஓம் சக்தியே
ஆதி பராசக்தியே
ஓம் சக்தியே
மருவூர் அரசியே
ஓம் சக்தியே
ஓம் விநாயகா
ஓம் சக்தியே
ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே
ஓம் பங்காருகாமாட்சியே

✴

மெல்பேர்ணில்
ஏற்றப்படவிருக்கிறது
**“ஆன்மிக ஜோதி”**
**06.02..2011**

மாலை 4.15மணி முதல்
6.00 மணி வரை

**கூட்டு வழிபாடு**

மாலை 6.15 மணி
தொடர்ந்து இரவு 8.00 மணி வரை

**கோமாதா பூஜை,
குருஜோதி வருகையும்
ஜோதி ஏற்றலுக்கான
ஆராதனைகள்,
திருஷ்டி எடுத்தல்,
ஆன்மிக ஜோதி ஏற்றல்,
தரிசனம்.**

**விழாவின் நிறைவில்
பிரசாதமும் அன்னதானமும்
வழங்கப்படும்.**

**இடம்:**
Menzies Hall
Menzies Avenue
(Cnr Curtin Crescent)
Dandenong North
(Mel. Ref.: 90 C 2)

# தருமம் என்றால் என்ன?

தருமம் என்பது இயல்பு, தன்மை. இது ஒவ்வொருவரின் முன்வினைப்படி அமைகிறது. இதுவே அவ்வுயிர்களின் கடமை என்றுமாகிறது. அவரவர் ஆற்ற வேண்டிய அறம் எனப்படுவது அவரவர் கடமையே. பிறக்கும்போதே எல்லோருக்கும் ஒரு தருமம் அமைந்துவிடுகிறது. அதற்கு விரோதமின்றி அவரவர் செயல்பட வேண்டும்.

அகம் எனப்படும் இன்ப வாழ்க்கையிலும் புறம் எனப்படும் பொருளீட்டி வாழும் வாழ்க்கையிலும் ஆன்மிகம் எனத்தக்க மோட்ச வாழ்க்கையிலும் அறம் என வருகின்றது. அதாவது யார் எந்த வாழ்வை நடத்தினாலும் தருமம், கடமை தவறக்கூடாது. ஆனால், எந்த நிலையிலும் தப்பே செய்யாதிருப்பது ‘மகாவிரதம்’ என்னும் உயர்ந்த தருமம்.

தருமத்தின் அடிச்சுவட்டில் இவ்வுலகமும் இயங்குகிறது. இப்பிரபஞ்சமும் இயங்குகிறது. இப்பிரபஞ்சமும், உலகமும், கோள்களும் உபகோள்களும் ஏதோ ஒரு நியதியில் இயங்குகின்றன. இதைத்தான் தருமம் அல்லது அறம் என்கிறோம்.

**தருமம்**

மனித வாழ்க்கையில் மிக முக்கியமான உண்மை ஒன்றை நீ கைப்பற்றி வாழ வேண்டுமென்றால், அது அதர்மங்களை நீக்கி வாழும் வாழ்வுதான்.

மனித வாழ்க்கையைப் பாதிக்கும் அதர்மங்கள், பொய், திருட்டு, பிறர்மனை நயத்தல், வஞ்சம், பொறாமை, ஆணவம் முதலியன.

இந்த வேளையில் அன்னையின் அருள்வாக்கினை நினைவில் நிறுத்துவது சிறப்பு.

## “உன் எண்ணங்களே உனக்கு எமனாக மாறும்”

ஒருவனுடைய எண்ணம் தூய்மையாக அமையாவிட்டால் அவனுக்கு எதிரி அவனுடைய எண்ணங்களே!

ஆபாச எண்ணங்களே ஓங்கி வரும் இந்தச் சமுதாயத்தில் என்ன நேரிடும்? தீய சக்திகளின் ஆதிக்கமும் அசுர சக்திகளின் ஆதிக்கமும்தான் ஓங்கும்.!
பக்கம்..2

அன்னையின் அருள்வாக்கு:

“ஆன்மிகத்திற்கு நடுவில் பித்தலாட்டம் செய்கின்ற தரகர்கள் தேவையில்லை”

சுடரில் 

**தருமம்**

பக்கம் - 1 - 6

**UPCOMING EVENTS**

Melbourne – Pg 9

Sydney _ Pg 8

**திருமதி அம்மா பதில்கள்**

**பக்கம்: 13**

அருள்வாக்கும் அனுபவங்களும்....

பக்கம்: 10 - 11

**Divine Miracles**

Pg: 7

**ஆன்மிக நாட்குறிப்பு**

**பக்கம்: 14**

**மேல்மருவத்தூர் சித்தர் பீட சிறப்பு விழாக்கள்**

**பக்கம்: 12**

# தருமம்....

அநியாயம், அக்கிரமம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, அராஜகப் போக்குகளே வளரும். பஞ்சம், வெள்ளம், பருவ மழை பொய்த்தல், பூகம்பம், கொள்ளை நோய்களே பெருகும்.

விஞ்ஞான முன்னேற்றமும், இயந்திர நாகரிகமும், இன்றைய மனிதனைப் பண மோகத்திலும் ஆடம்பர மோகத்திலும் மூழ்க வைத்து வெறியாக மாற்றி வருகின்றன. அதனால் உலகம் ஒரு நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கிறது. அதன் பாதிப்புகள் இந்த நாட்டிலும் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

> தருமங்கள் மனித இனத்திற்குப் பொதுவானவையே. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வு சிறப்படைவதற்காகச் செய்கின்ற செயல்கள் அனைத்தும் தருமமாகும். அப்படிப் பெறுகின்ற சிறப்பும் தருமமே. அதே வழியில் ஒவ்வொரு மனிதனும் இணைந்த அந்தச் சமுதாயத்தில் சிறப்பாகச் செய்யும் பணிகளும் அவற்றால் பெறுகின்ற சிறப்பும் தருமமாகும்.

வெள்ளம், சூறாவளிக் காற்று என்ற இயற்கை சக்தியாக நின்று அவனுக்குக் கேடு விளைக்கின்ற சக்தியை, அதன் வேகத்தைத் தணித்து அனுகூலமாக்கவும், உதவக்கூடிய பணிகளும் அவற்றால் பெறுகின்ற சிறப்பும், தருமமாகும்.

> பிறப்பும், இறப்பும் மாறிமாறித் தொடர்வதைப் பெரும் துன்பமாகக் கருதிப் பிறவாமையை இன்பமாகக் கருதுகின்றான் ஞானி. அந்த ஞானியின் நிலையைப் பெறச் செய்கின்ற பணிகளும் அவற்றால் பெறுகின்ற சிறப்பும் தருமமே.

மனிதனாகப் பிறந்து வாழ்ந்து, மேன்மேலும் உயர்ந்து சிறப்பைப் பெறச் செய்கின்ற செயல்கள் அனைத்தும் தருமமே. இதற்கு மாறாக மனிதனாகப் பிறந்தவன் மிருகத் தன்மையுள்ள மனிதனாக வாழ்ந்து வரவரக் கீழ் நிலைக்குத் தள்ளுகின்றவாறு செய்கின்ற செயல்கள் அனைத்தும் அதர்மமாகும். தருமம் தாங்கும் தன்மை படைத்தது. அதர்மம் அதற்கு எதிரானது. தருமமே வெல்லும்.

தருமமானது அதர்மமாகவும், அதர்மமானது தர்மமாகவும் தோன்றுகின்ற நிலைகளும் உண்டு. ஆதலால் சுய அறிவால் நிர்ணயிப்பது தவறாகக் கூடும். இந்நிலையில் நம்பகமான வழிகாட்ட ஒரு பொது நூல் தேவை. இந்த தார்மீகப் பண்பாட்டிற்கு நீதி நூல்கள் உதவும்.

## தனிமனித வாழ்வில் 4 நிலைகள்

ஒவ்வொரு மனிதனின் வாழ்வில் நான்கு நிலைகள் உள்ளன. அவையாவன:

- மாணவப்பருவம்
- இல்லறத்தான் பின்பற்ற வேண்டுபவை
- காடுறை வாழ்க்கை
- துறவறம் (துறவி)

(தொடர்ச்சி..3ஆம் பக்கம்)

# தருமம்....

## மாணவப்பருவம்

மாணவப்பருவமானது, ஐந்து அல்லது ஏழு சரியான வயது.
ஒரு குருவைத் தேடியடைந்து கற்பது வாழ்நாளில் நாலில் ஒரு பாகம் மாணவப் பருவம். இந்தக் காலகட்டம் பயில ஒதுக்கப்படுகிறது. பழங்காலக் கல்வி முறை மிக எளிமை. குரு குலத்தில் சேர்ந்துவிட வேண்டும். அனுமதிக்கப்பட்டதையே உணவாகக் கொள்ள வேண்டும்.

சேருவதற்குப் பணம், தனிச்சிறப்புக் கட்டணம், நூலகப்பணம், சேரும்போது நன்கொடை அளிப்பது எல்லாம் அப்போது கிடையாது.

அரசகுமாரனாக இருந்தாலும் ஆண்டியானாலும் எல்லோரும், பிச்சை எடுத்து வந்தே உண்ண வேண்டும். ஒழுக்கத்திற்கே முதலிடம் தரப்பட்டது. அந்தணர்கள் வேதம் ஓதும் பணியை செய்ய வேண்டும். சத்திரியர், வைசியர் அவரவருக்கான வேதப்பகுதிகளுடன் அவரவருக்கான வித்தைகளை தொழிலைப் படிப்பர்.

எடுத்த காரியத்தில் முயற்சி, குரு பக்தி, உண்மை, அறம் முதலியவற்றில் பிடிப்பு முக்கியமாக வேண்டும். குருவினால் தரப்பட்டதை இகழாமல் புசிக்க வேண்டும்.

வித்தை முடிந்து குரு தட்சணை தந்துவிட்டு ஒரு கன்னிகையை முறைப்படி மணந்து இல்லற தருமம் பின்பற்ற வேண்டும்.

## இல்லறத்தான் பின்பற்ற வேண்டுபவை (இல்லற தருமம்)

மாணவப்பருவம் முறைப்படி முடிந்தபிறகு, ஒரு கன்னிகையை மணந்து கொள்ளுகிறான்.

அறவழி தவறாது பொருளீட்டி அந்தப் பெண்ணுடன் ஒரு வீட்டில் இல்லறம் நடத்த வேண்டும். அவனிடத்தில் வாரிசைப் பெற வேண்டும். ஆயுளில் இரண்டு பங்கு இப்படிக் கழியும்.

இருப்பதில் கொடுக்கும் இரக்க குணம் இருக்க வேண்டும்.

பிராமணர் மகா யாகங்கள் செய்ய வேண்டும்.

சத்திரியர் அரசியலிலும், வைசியர் வியாபாரத்திலும் பொருளீட்டிப் பிழைக்கலாம்.

இரண்டு வேளைக்கு நடுவே உண்ணக் கூடாது.

உதவும் குணமுள்ள இல்லறத்தாருக்குரிய பலனாக சொர்க்க சுகம் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இல்லறம் நடத்தி வாரிசுகளிடம் பொறுப்பை விட்டு விட்டுக் கானகம் போவர்.

## காடுறை வாழ்க்கை – வானப்பிரஸ்தம்

முறைப்படி மாணவப்பருவம், இல்லறம் இரண்டையும் நடத்தி முதுமையை உணர்ந்து பேரனை எடுத்தவுடன் பொறுப்புகளை வாரிசிடம் ஒப்படைத்துவிட்டு வனம் சென்றுவிட வேண்டும். இதுவே காடுறை வாழ்க்கை அல்லது வானப்பிரஸ்தம் என்பதாகும்.

வயதில் மூன்றாவது பகுதி காட்டில் கழிய வேண்டும். தினமும் ஒரு வேளை உணவு உட்கொள்ள வேண்டும். நியமங்களுடன் ஒரே விதமான உணவாக எடுக்க வேண்டும். தவறிழைக்காத தூய நடத்தை வேண்டும். சிலர் தவங்களும் விரதங்களும் செய்வர். தத்துவ ஆராய்ச்சி, இறைவனைப் பற்றிய கதை கேட்டல், தவசிகளின் சேவை எனப்பொழுதுபோகும்.

ஆயுளின் நான்காம் பகுதியில் இந்த வாழ்க்கையைவிட்டு அடுத்த நிலையை அடைய வேண்டும். அப்போது இருக்கும் எல்லாப் பொருள்களையும் தானம் செய்துவிட்டுத் துறவறம் ஏற்பர்.

(தொடர்ச்சி...4ஆம் பக்கம்)

# தருமம்....

## துறவறம் (துறவி):

மௌனமாக ஆத்மாவைச் சிந்தித்துக்கொண்டு அன்றன்றைக்கு மட்டும் ஆகாரம் பிச்சை வாங்கி உண்ண வேண்டும்.
ஒருவேளை உணவே துறவிக்கு ஏற்பட்டது. மரத்தடியில் தூங்கவேண்டும். குப்பையில் கிடக்கும் கந்தையையே கசக்கிக் கட்ட வேண்டும். உணவுப் பாத்திரமாக ஓடுதான் வைத்திருக்க வேண்டும்.

மான அவமானம் பார்க்கக்கூடாது. பிறர் பழித்தாலும், கிணற்றில் போட்ட கல்லாக மௌனமாக இருந்துவிட வேண்டும். பழி கேட்பதோ, கூறுவதோ கூடவே கூடாது. கிடைத்ததை உண்டு கிடைத்த இடத்தில் படுத்துக்கொண்டு காலம் கழிப்பவனே துறவி. மரணத்தை வேண்டாமலும் வாழ விரும்பினாலும் காலத்தைத் தள்ளிக் கொண்டு கடவுள் கட்டளைக்காக உண்மையான துறவி காத்துக் கிடப்பான்.

## சமூக வாழ்வில் தருமங்கள்:

சமூக வாழ்வில் நான்கு நிலைகளில் உள்ளவர்களைப் பார்ப்போம்.

சத்துவ குணமுடையோர் அந்தணராவார். இரஜோ குணமுடையவர் சத்திரியர்(அரசர்) எனப்படுவர். தமோ குணமுள்ளவரை இரஜோ குணக்கலப்புடன் கவனித்து வணிகர் என்றும், தமோ குணம் மட்டும் மிகுதியானவரை வேளாளர் (சூத்திரர்) என்றும் கூறுவர்.

**அந்தண தருமம்**

வேதம் சொல்வதிலும், ஆன்ம விசாரத்திலும், ஞானத்திலும் சிறந்தவராக அந்தணர்கள் இருக்க வேண்டும். தருமத்துடன் விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
எந்தப் பிராணிக்கும் துன்பம் தராமல் அந்தணர்கள் வாழ வேண்டும்.

சாத்திரங்களிலிருந்தும், தனது குருவினிடமிருந்தும் அறிவைப் பெற வேண்டும். உலகில் தனக்குள்ள தருமம்படிக் கருமஞ் செய்து காலம் தள்ள வேண்டும். இவர்கள் வெள்ளை நிறமுடையவராவர்.
தூய்மையான நன்னடத்தையும் கருணையும் அந்தணர்களுக்கான இலக்கணம். யாகம் செய்தல்-செய்வித்தல், வேதம் ஓதுதல்-ஓதுவித்தல், தானம் செய்தல்-செய்வித்தல் என்று ஆறாகவும் கூறுவர்.

இந்தத் தருமத்திலிருந்து தவறி மனம்போல நடந்துகொண்டு எத்தொழிலையும் செய்து எப்படியும் வாழ்பவர்கள். தருமத்திலிருந்து தவறிய அந்தணர்களாவர்.

**அரச தருமம் (சத்திரிய தருமம்)**

நீதிக்காகப் போராடும் குணமும், அரசியலுக்குத் தக்க மனப்பான்மையும், மக்களிடத்து பணம் வசூலிப்பனும், இவற்றில் உற்சாகமடைபனும் அரசன் (சத்திரியர்) எனப்படுவர்.

உலக சுகங்களில் ஆசை உள்ளவராகவும் கோபம், வீரம் உள்ளவராகவும், சூரத்தனஞ் செய்வதில் பிரியமுள்ளவராகவும், சிவப்பு நிறம் உடையவராவார்.

பகைவரை விரட்டி, உள்நாட்டுக் குழப்பத்தை அடக்குதல், நீதியை நிலை நாட்டல், அண்டியவர்களைக் காத்தல் ஆகியன அரச தருமமாகும்.

**வணிக தருமம் (வைஸ்ய தருமம்)**

உழவுத் தொழிலும், பசுக்களைக் காத்தலும், பிறபொருட்களை உற்பத்தி செய்தும், வாங்கி விற்றும், வாணிகம் செய்தலும், வணிக தருமமாகும். இரஜோ குணமும், தமோ குணமும் கலந்த இயல்பு இவரது குணம்.

நேரிய வழியில் பொருளீட்டி தானதருமங்களைச் செய்யவேண்டும். இவருடைய நிறம் மஞ்சள் எனப்படும்.

(தொடர்ச்சி...5ஆம் பக்கம்)

# தருமம்....

**வேளாளர் தருமம் (சூத்திர தருமம்)**

தமோ குண அடிப்படையில் இவ்வருண தருமம் உள்ளதால், இது மேம்பட்டுப் படிப்படியாக இரஜோ, சத்துவ குணம் அடையவே, இவர்கள் அந்தந்த இயல்புடையவரிடம் பணி செய்யக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் கறுப்பு நிறம் உடையவராவர்.
குண அடிப்படையில் செய்யப்படும் தருமங்களுக்கு ஏற்ப வகுப்புகள் பிரிக்கப்பட்டதால் அந்தந்த குண தருமம் உடையவருக்கு அந்தந்த நிறம் கூறப்பட்டிருக்கிறது.

### இனத்தாலேயே உயர்வு:

இரத்தமும், சீழும், மூத்திரமும், வியர்வையும் ஒரே மாதிரி வெளிப்படுத்தும் சரீரம் உடையவர்களுள் இப்படிப்பேதம் குண வேறுபாடுகளாலேயே சொல்லப்படுகிறது.
இம்சையிலும், பொய்யிலும் மனம் சென்று பணத்தையே பெரியதாக எண்ணி எல்லாத் தொழிலையும் செய்து வாழும் அந்தணர்களை சூத்திரர் என்று சொல்லுகிறது.

### மகாபாரத நீதி:

கட்டுப்பாடு இன்றி கண்டதைத் தின்று எதை வேண்டுமானாலும் தொழிலாகச் செய்துகொண்டு வேத தருமத்தை விட்டு விட்டு, ஆச்சாரமின்றி இருப்பவரையே சூத்திரர் என்கிறார் பிருகு முனிவர்.
எப்படி அந்தணருள் ஆசாரங்களைவிட்டுத் தாழ்ந்து விடுபவருண்டோ அப்படியே சத்தியம் முதலிய உயர்ந்த பண்புகளைப் பெற்றிருக்கும் சூத்திரர்களும் உண்டு. ஆகவே, முயற்சியால் மனத்தை அடக்கி நல்லவராக சத்துவ குணமடையப் பாடுபட வேண்டும்.

நல்ல நடத்தையும் சத்துவ குணமும் இல்லாமல், எவரும் அந்தணர் என்று சொல்லிக்கொள்ள முடியாது. இதுவே வேதங்களிலும், இதிகாசங்களிலும் 'இந்து தருமத்தின் தத்துவம்' தெரிவிப்பது.
ஆனால், தாழ்ந்த நிலையிலிருப்பவரும் உணர்ந்த நிலையை அடைய வேண்டும் என்றுதான் சாத்திரங்கள் விரிவாகச் சொல்லியுள்ளன.

எல்லாத்தரத்தில் இருக்கும் மக்களும் மனிதர் மட்டுமின்றி மற்ற உயிர்களும் மேல் நிலையை அடைய வேண்டும் என்பதே இந்து தருமத்தின் விருப்பம். அதற்காகவே உயிர்களின் தரம் பிரித்து ஏற்றத் தாழ்வுகளைக்கூறி அவரவர் இருக்கும் தம் நிலையிலிருந்து மேலே வர அறிவைத் தருகின்றது.

## இந்து தருமம்

'இந்து தருமம்' உலக மனித இனத்திற்கே பொதுவானதுதான். ஒரு காலத்தில் வேத தருமமே எங்கும் பரவி இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கும்படி அல்லது அனைத்து மதத்தாருமே வேத தருமத்தை அடிப்படையாகக்கொண்டு உண்டாயிருக்க வேண்டும் என்று முடிவு செய்யும்படி எல்லா தத்துவ வழிகளிலும் இந்து தரும இழைகள் ஓடுகின்றன.

கிருஷ்ணனின் போதனைகள் சிலவற்றுடன் கிறிஸ்துவின் போதனைகள் ஒத்திருக்கின்றன. பிறப்பும் பிறந்தவுடன் நடந்த நிகழ்ச்சிகளும் இருவருக்கும் ஒத்து உள்ளன என்று விவேகானந்தர் கூறுவார்.

'கடவுள்' சங்கல்பத்தால் இவ்வுலகைப் படைக்கிறார்' என்கிறது இந்து தருமம்.
ஆக, வேறு எந்த மதத்திலும் இல்லாத தத்துவ வழிகள் கூட தருமம், யோகம், ஞானம், பக்தி என்று ஏகப்பட்ட வழிகளையும் அடக்கி மனிதன் பிறவிப்பயனை எய்தவைப்பது இந்து தருமத்தின் நோக்கம்.

மனிதனின் பிறவி நோக்கத்தை அவன் அடைய வேண்டியே இதற்கேற்ற வாழ்க்கை முறையை அது வகுத்துத் தந்துள்ளது. ஆகவே, இந்த ஆச்சார முறை வழியாகக் குடும்பங்களில் அது கடைப்பிடித்து ஒழுகப்படுவதால் சம்பிரதாயமாகிறது. அந்தச் சம்பிரதாயத்தில் செய்யப்படுபவையே சடங்குகளாகின்றன.

(தொடர்ச்சி... 6ஆம் பக்கம்)

# தருமம்....

மனிதன் சுகமாக வாழ வேண்டும். இதற்காகவே எல்லாத் தருமங்களும் கூறப்பட்டுள்ளன. ஆகவே, மனிதன் வாழவே முடியாத ஒரு நிலை வருமேயானால் சாத்திரம், சம்பிரதாய சடங்குகளைப் புறக்கணிக்கலாம் என்று இந்து தருமம் வளைந்து இடம் தருகின்றது.

ஒரு அரசனின் தருமத்தை ஓர் ஏழையின் மீது இந்து தருமம் ஒரு நாளும் சுமத்துவதில்லை. ஓர் இல்லறத்தானின் கடமைகளை, ஒன்றுமே தன்னிடம் வைத்துக்கொள்ளாத ஒரு துறவியிடம் இந்து தருமம் என்றுமே திணிப்பதில்லை.

அதேபோல், உலகில் அனுபவித்து, சுகப்பட நினைக்கும் ஒருவனிடம் தலையில் முக்திக்கான தருமத்தை வைப்பதே இல்லை. சுகமாக வாழும்போது ஒருவன் கடைப்பிடிக்கவேண்டிய தருமங்களை அவனுடைய உயிர் போகும் ஆபத்தான வேளையிலும் அதனைச் செய்தேயாக வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை. இந்து தருமம் இப்படிப் பல வகையில் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்கின்றது.

## அறநிலைகள்

அன்னை நமக்கு வசதியை அளிப்பது இல்லாதவருக்கு உதவவே. ஆகவே அந்த நாளிலிருந்து ஏகப்பட்ட அறநிலையங்கள் உலகில் ஏற்பட்டுள்ளன. நிறைய வருமானம் உள்ளவர்கள் அறநிலயம் (Charity) அமைத்து பிறருக்கு உதவுவர். தமது வாழ்நாளுக்குப் பிறகு இப்படி உதவ அறநிலைய அமைப்புகளை உண்டாக்குவதும் உண்டு. பொதுவாகவே வணிகர்களே அதிகம் இப்படி அமைத்து நல்ல காரியங்களுக்கு உதவுவது வழக்கம்.

## மோட்ச தருமம்

இதில் எல்லா தருமங்களும் வந்து விடுகின்றன. புலனடக்கம், தியானம், ஜெபம், பக்தி மூலம் ஈடுபடலாம். பிறவியிலமைந்த சூழ்நிலைப்படி உள்ள கடமைகளை விடாமல் செய்ய வேண்டும். தியாக சிந்தனை, தரும சிந்தனை இல்லாதவருக்கு மோட்ச வித்தை கைகூடாது.

புலன்களை மனத்திலும், மனத்தை புத்தியிலும், புத்தியை ஆன்மாவிலும் அடக்கி அன்னையைச் சரணடைந்து விடுதல் எளிய நிச்சய வழியாகும்.

வழியும், பயனும் அந்தக் கடவுளே. யோகம், கருமம், ஞானம், பக்தி எதைச் செய்தாலும் அன்னையின் திருவுள்ளம் விழுந்தாலேயே முக்தி.

மோட்சம், அன்னையின் அருளால் அவளை அடைதல். நமது திறமையினால் பெறுவது இல்லை. எனவே, அன்னையை வேண்டி ஏங்கி இருப்பதே நாம் செய்யக் கூடியது.

## பொதுவான தருமம்

வலியவனைப் பகைத்துக்கொள்ளக் கூடாது.

நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையும், உறுதியும் இருந்தால் அன்னையின் அருள் கிடைத்து நலம் கிடைக்கும்.

சரணடைந்தவனைக் காக்க வேண்டும்.

முடியாத செயலில் நுழையக் கூடாது.

உமி போலப் புகைந்து கொண்டு இருப்பதைவிட நெருப்புபோல் பளபளத்து அடங்கலாம்.

நல்லவனைத் துணை சேர்த்துக்கொள்ளவேண்டும்.

வெளித்தோற்றத்தை வைத்த எடை போடக் கூடாது.

மனித தருமங்கள் மதிக்கப்படாத குடும்பம், வெகு நாள் வாழாது அழிந்து போகும்.

# அன்னையின் மருத்துவ அருள்வாக்கு

### பசி வந்திட...

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி. பசி என்றால் வயிற்றுப்பசி மட்டுமன்று. பதவிப்பசி, பணப்பசி என்று எல்லாவற்றையும் குறிக்கும்.இப்படி குறிப்பிட்ட எந்தப்பசி வந்தாலும் எல்லாம் பறந்து போகும் என்பது பொருளாகும்.

### பூச்சி மருந்தால் தீமை

பயிர் செழிக்க வேண்டி பூச்சி மருந்து தெளிக்கிறார்கள். அந்தப்பூச்சி மருந்தின் சத்தும் மனித உடம்பிற்குள் நுழைந்து மனித உடம்பு நோய் நொடிக்கு ஆட்படுகிறது.

### உடல்நலன்

அதிக தண்ணீர் ஊற்றினாலும் செடியின் வேர் அழுகி விடும் பசி இல்லாமல் அதிகம் உண்டால் உடல் கெட்டு விடும். செடி இருந்தால்தான் விதை. விதை இருந்தால்தான் செடி உடல் நலம் முக்கியம்.

## Divine Miracles at Melmaruvathur

### The mother bird and its chicks

The fourth spiritual conference took place in Chennai at the Congress grounds in Teynampet. Mother said during Her oracle:

"Son, I want to raise you all to great spiritual heights. When a mother bird flies with her fledglings the young ones keep falling to the ground unable to fly. So also my devotees are unable to give up their attachments and keep falling down spiritually. How much energy is used by the mother bird to fly from the ground? It comes again to the ground for her fledglings. It has to spend the same energy once again to take its young ones up. Similarly I too am required to come down often to take my children to the spiritual heights".

# "1008படி! 108படி!....

**"1008 படி! 108 படி! என்றால் யாரும் வருவதில்லை. சினிமாப் படக்காட்சி என்றால் அங்கே தான் கூட்டம் கூடுகிறது. தண்ணீரைத் தான் குடிக்கலாம். கானல் நீரைக் குடிக்க முடியாது. ஆனாலும் உலகம் கானல் நீரை நோக்கித் தான் ஓடுகிறது. கானல் நீரை நம்பி ஓடும் மான்களாக இன்றைய மக்கள் இருக்கிறார்கள்."**

**- அன்னையின் அருள்வாக்கு**

# Sydney - Mandrams - Upcoming Events – February 2011

## Homebush

Melmaruvathur
Athiparasakthi
Sithar Peeta
Sydney Centre

Contact: 02-97643872
0416217317

**Every Friday**
7.30p.m. – 9.00p.m.

Homebush High School
(Gymnastic Hall)
Bridge Road,
Homebush 2140

**Joint Prayers:**
04.02.2011
11.02.2011

18.02.2011
Pournami Vilakku Pooja
7.30p.m. – 9.30p.m.

25.02.2011

## Westmead

Melmaruvathur Swayambu
Arulmihu Annai
Athiparasakthi Sitherpeedam
NSW (Australia)

Contact: 02-96420519
0425319622

**Every Friday**
7.30p.m. – 9.30p.m.

Westmead Public Primary School
Moree Street - Westmead

**Joint Prayers:**
04.02.2011
11.02.2011

18.02.2011
Pournami Vilakku Pooja
7.30p.m. – 9.30p.m.

25.02.2011

## Lidcombe

Athiparasakthi
Spiritual & Charitable
Movment of
Australasia

Contact: 02-97022446

**Every First Friday of the month**

7.30p.m. – 9.30p.m.

23, Cambridge Street,
Lidcombe 2141
NSW

**Joint Prayers:**

18.02.2011

Pournami
Vilakku Pooja

7.30p.m. – 9.30p.m.

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

ஆண்டுச்சந்தா ரூபா 60.00 (இந்தியா)
ஆயுள் சந்தா ரூபா 1008.00 (இந்தியா)

**வெளிநாட்டுச் சந்தா இந்திய ரூபா 1300.00 (இரண்டு ஆண்டுகள்)**

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும். உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,‘Sakthi Oli’Office, Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,Tamil Nadu, South India.

# Melbourne Mandrams - Upcoming Events – February 2011

## Clayton

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vara Valipaattu Mandram**
(Reg.No.: 2193)

Every Tusday
7.00p.m. – 9.00p.m.

198 Clayton Road - Clayton
(Mel. Ref.: 70 C 12)

Joint Prayers:

01.02.2011

06.02.2011
"Aanmeega Jothi"
Lighting Ceramony
Menzies Hall
41A Menzies Avenue, (Cnr Curtin Crescent)
Dandenong North - (Mel.Ref.: 90 C 2)

08.02.2011
15.02.2011
22.02.2011

## THE WORLD IS COMMON TO HUMAN

"Son! The birds fly freely anywhere! The animals roam in the forest freely. The fishes swim in the waters of any country. Nobody is able to impose a barrier on them. But man cannot live freely everywhere. The freedom possessed by others is not had by man! Because fanaticism is the barrier! Nature and the world is common to all! The barriers of nation, language, caste, religion are created by man."

- Melmaruvathur Amma's Oracle

## Mulgrave

**Athiparasakthi Melbourne Mandram of Australia (AMMA)**

Every Sunday

06.02.2011
10.00a.m. – 12.30p.m.

13.02.2011
10.00a.m. – 12.30p.m.

20.02.2011
ThiruVilakku Pooja
09.00 a.m. Guru,Vinayagar,Karuvarai Pooja
Chakkara drawing
06.00 p.m. Thiru Vilakku Pooja

27.02.2011
10.00a.m. – 12.30p.m.

Southern Community Centre,
Rupert Drive - Mulgrave 3170
(Mel.Ref:: 80 F 5)

## Dandenong

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vara Valipaattu Mandram**
(Reg.No.: 2193)

Every Sunday
6.00pm – 8.00pm

Dandenong Library Hall,
Stuart Street,
Dandenong
(Mel.Ref.: 90 E 7)

Joint Prayers:

06.02.2011
"Aanmeega Jothi"
Lighting Ceramony
Menzies Hall
41A Menzies Avenue, (Cnr Curtin Crescent)
Dandenong North - (Mel.Ref.: 90 C 2)

13.02.2011
20.02.2011
27.02.2011

## Vermont South

**Melmaruvathur Athiparasakthi Vara Valipaattu Mahalir Mandram**

Every Friday
7.30 – 9.30p.m.

Vermont South Community House,
Karobran Drive – Vermont South 3133
(Mel.Ref.: 62 G 7)

கூட்டு வழிபாடு-Joint Prayers:

04.02.2011
11.02.2011

18.02.2011
பௌர்ணமி
விளக்குப்பூஜை

25.02.2011

## Lalor

**Vara Valipattu Mandram**

Alternate Sundays

4.00p.m. – 6.00p.m.

Yarra Plenty Regional
Library Service,
(Hall adjacent to the library)
May Road,
Lalor 3075
(Mel.Ref.: 8 K 6)

Joint Prayers:

13.02.2011

27.02.2011

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

அன்னையின் அவதாரகாலப் பெருமைகளைக்கூறி உலாவரும் பத்திரிகை சக்தி ஒளி அதன் ஆசிரியராகப் பணி செய்தவர் திரு.இராமசாமி. அன்னையால் அப்பணிக்கு நியமிக்கப்பட்டவர். வயது முதிர்ந்தவர். வசதியான ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர். காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். வரலாற்றுப் புகழ் மிக்க ஆவடி காங்கிரஸ் மாநாட்டில் உணவுப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட செயல் புரிந்தார். செங்கற்பட்டு மாவட்டக் காங்கிரஸ் கட்சியில் முக்கியப்புள்ளி, பிரம்மச்சாரி, இராமகிருஷ்ணா பள்ளியில் இளமைக்கல்வி பயின்று பொறியியல் பட்டம் பெற்றவர். எந்த வேலைக்கும் போகாமல், முதிய வயதில், தம் ஜமீன் நிலபுலன்களை மேற்பார்வை பார்த்துக்கொண்டு வாழ்ந்து வந்தவர்.

அவரிடம் இருந்த தகாத பழக்கம் 20 வருடங்களாக குதிரைப் பந்தயத்தில் கலந்துகொண்டு வேடிக்கை பார்ப்பது. “இந்தப் பழக்கத்தால் நான் பணத்தை விரயம் செய்துவிடவில்லை. சுமார் 300 ரூபாய் இழந்திருப்பேன். ஆனாலும் குதிரைப் பந்தயத்தில் கலந்துகொண்டு பணத்தை வீணாடிக்கிறார்... என்று என்னைப் பற்றித் தவறாகப் பேசுகிறார்கள்” என்று அவரே கூறுவதுண்டு. அரசியலை வெறுத்து ஆன்மிக ஈடுபாட்டுடன் வாழ்ந்த அவர் அன்னையிடம் வந்த கதை வேடிக்கையானது.

1982ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒருநாள், குதிரைப் பந்தய மைதானத்தில் அமர்ந்துகொண்டு பந்தயத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது அவருடைய நண்பர் ஒருவர், அவர் அருகில் வந்து அமர்ந்தார். அவருக்குச் சுமார் நாற்பது வயது இருக்கும். ஐயோ! அம்மா! அம்மா! என்று முனகிக்கொண்டிருந்தார். என்ன? என்ன ஆயிற்று உங்களுக்கு? என்று இந்தப் பெரியவர் கேட்டார்.

“அதை ஏன் கேட்கிறீர்கள்? புற்றுநோயால் படாதபாடு படுகிறேன். அதுவும் எந்த இடத்தில் வந்திருக்கிறது தெரியுமா? சிறுநீர்ப் பையில் புற்றுநோய், தினம் தினம் நரக வேதனை, இங்குள்ள டாக்டர்கள் இதற்குத் தங்களால் மருத்துவம் செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள். இலண்டனுக்குப் போனேன். அங்கிருந்த டாக்டர்களும் இதற்கு அறுவை சிகிச்சை செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள். வலியும் வேதனையும் தாளாமல் இப்படித் துடித்துக்கொண்டிருக்கிறேன்” என்றார்.

“உங்கள் நோய் நீங்கவேண்டுமானால் ஒருமுறை மேல்மருவத்தூர் சென்று வாருங்களேன். மேல்மருவத்தூர் பற்றி எல்லோரும் பிரமாதமாகச் சொல்கிறார்கள். அங்கே ஒருவர் மூலம் அம்மன் அருள்வாக்குச் சொல்கிறார்களாம். பலபேருடைய தீராத நோய்களையெல்லாம் அம்மன் குணப்படுத்தி வருகிறாளாம். நான் கேள்விப்பட்டேன்”.

“நீங்கள் ஒருமுறை அங்கே சென்று வாருங்களேன். உங்களைப் பொறுத்தவரை டாக்டர்கள் கைவிட்டுவிட்டார்கள். நான் சில ஆண்டுகளுக்கு முன் அந்தக் கோயிலுக்குப் போனதுண்டு. ஆனாலும் அருள்வாக்கு கேட்டதில்லை” என்றார்.

“எனக்கு அங்கே யாரையும் தெரியாதே! எனக்காக ஓர் உதவி செய்யுங்கள். நான் கார் எடுத்துக்கொண்டு வருகிறேன். தயவு செய்து என்னை அங்கே அழைத்துக்கொண்டு செல்ல வேண்டும்” என்று வேண்டினார் நண்பர்.

3.3.82 அன்று அந்த முதியவரும் நண்பரும் புறப்பட்டு மேல்மருவத்தூர் வந்தனர். “எனக்கு அருள்வாக்கு கேட்க விருப்பமில்லை. எனவே என் பெயரைப் பதிவு செய்யவில்லை. நான் கோயிலை வலம் வந்துவிட்டுக் காரிலேயே இருக்கிறேன். நீங்கள் மட்டும் சென்று அருள்வாக்கு கேட்டுக்கொண்டு வாருங்கள்” என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் ஆகியிருக்கும். நண்பர் காருக்குத் திரும்பினார். “அம்மன் என்னை மறுபடியும் இலண்டனுக்குப் போய் அறுவை சிகிச்சை செய்துகொள்ளும்படி சொல்லிவிட்டது. இந்த முறை அறுவை சிகிச்சை நல்லபடி முடியுமாம். கலசம் வாங்கிச் சென்று வீட்டில் வைத்து வழிபடுமாறு சொல்லியிருக்கிறது. அத்துடன் “உன்னை இங்கே அழைத்துக்கொண்டு வந்த அந்த மகனை என்னிடம் வரச்சொல்! என்று கூறியுள்ளது.

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

அதுகேட்ட முதியவர் "அருள்வாக்குக்காக நான் கட்டணம் செலுத்தக் கூடவில்லையே.." என்று கூறி முடிப்பதற்குள், ஒரு தொண்டர் அவசர அவசரமாக ஓடி வந்து "சார்! உங்களை அம்மா கூப்பிடுகிறது வாங்க" என்று அழைத்தார்.
அன்னையே அழைப்பதாகக் கூறப்பட்டுவிட்டதால், புற்று மண்டபத்துக்குள் சென்று அன்னையை வணங்கிவிட்டு எதிரில் அமர்ந்தார்.

"மகனே! நீயோ திருமணம் செய்துகொள்ளவில்லை. தனிக்கட்டை. உனக்கு வாரிசு என்று யாரும் இல்லை. இங்கே விரைவில் ஓர் ஆன்மிக மாநாடு நடத்தப் போகிறேன். அம்மாநாட்டில் வந்து கலந்து கொண்டு தொண்டு செய்! குதிரைப் பந்தயத்திற்குச் சென்று ஏன் வீணாகக் காலம் கழிக்கிறாய்? வேறு ஏதாவது கேட்க வேண்டுமென்றால் கேள் மகனே!" என்றாள் அன்னை.

அதுகேட்ட முதியவர் "தாயே! எனக்கோ 70 வயது ஆகிறது. நீண்ட வருடங்களாகத் தீராத வயிற்று வலியால் அவதிப்பட்டுக்கொண்டு வருகிறேன். இன்னும் எத்தனை நாள் உயிரோடு இருக்கப்போகிறேன் என்பதும் எனக்குத் தெரியாது சோதிடர்களோ, உன் சனி திசை முடியவில்லை என்று கூறுகிறார்கள். வெகு விரைவில் உன் ஆயுள் முடியும் என்று சொல்லாமல் சொல்லிக் காட்டி விட்டார்கள். இந்த நிலையில் இருக்கும் நான் இங்கு வந்து என்ன தொண்டு செய்ய முடியும்?" என்று விநயமாகக் கேட்டார்.

உடனே அன்னை "மகனே! உன் ஆயுள் என் கையில் இருக்கிறது. உனக்கு மரணம் சமீபத்தில் இல்லை. எந்த நோயும் உன்னைப் பாதிக்காமல் நான் பார்த்துக்கொள்கிறேன். நீ இங்கே வந்து தொண்டு செய்!" எனச் சொன்னாள்.

உடனே அவர் அன்னையை வணங்கிவிட்டு வெளியே வந்தார். இனி இந்தக் குதிரைப் பந்தயத்தின் பக்கமே போகக்கூடாது என்று உறுதி எடுத்துக்கொண்டு திரும்பினார். இருபதாண்டு பழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.
மீண்டும் 4.03.1982 அன்று மேல்மருவத்தூர் வந்தார். அப்போது அருள்வாக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

மேல்மருவத்துரில் முதல் ஆன்மிக மாநாடு நடத்துவது பற்றிக் கூறிய அன்னை, மாநாட்டுப் பொறுப்பாளர்களை அப்போது நியமித்தாள். அந்த முதியவர் அங்கு சென்று நின்றார். "மகனே! உன்னை உணவுக் குழுத் தலைவனாக நியமித்திருக்கிறேன்" எனத் திருவாய் மலர்ந்தாள். அதுபோன்ற பெரியதொரு பொறுப்பு கொடுக்கப்படும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.
ஏற்கனவே காங்கிரஸ் மாநாடுகளில் பங்குகொண்டு நடத்திய அனுபவம் இருந்ததால் நல்ல முறையில் பணியாற்ற முடியும் என்று எண்ணினார். சென்னைக்குத் திரும்பி பெட்டி படுக்கைகளுடன் வந்தார். மாநாட்டு உணவுப் பொறுப்புகளை ஏற்றுச் செயல்படத் தொடங்கினார்.

அவர் உணவுக்குழுப் பொறுப்பேற்று நான்கே நாட்கள் ஆயின. ஈற்பதாண்டு காலம் அவரை வாட்டி வந்த வயிற்று வலி மாயமாகப் போயிற்று. அவருக்கே அளவு கடந்த ஆச்சரியம் உண்டாயிற்று. அதன் பிறகு அன்னையின்மேல் ஆழ்ந்த நம்பிக்கையும், பக்தியும் உண்டாயிற்று. ஆரம்ப நாட்களில் பல வசதிக் குறைவுகளைச் சகித்துக்கொண்டு, தொண்டு செய்தார்.

"உன் வயிற்று வலியைக் குணப்படுத்துகிறேன்" என்று அன்னை சொல்லியபோது அவரால் நம்ப முடியவில்லை. 40 வருடகாலப் பிராப்த வல்வினையை நீக்கினாள் அன்னை. சோதிட நிபுணர்கள் கணக்கையும் மாற்றினாள். மேலும் 20 ஆண்டுகள் அவரது ஆயுளையும் நீட்டினாள்.

# Amma's Medicines:

## Diabetes

**Having hill gooseberry (malai nellikkai) with woodapple everyday cures diabetes.**
**Also consuming goat's milk mixed with wheat and rice flakes(aval) will control diabetes.**

குருவடி சரணம்! திருவடி சரணம்!



## ஆதிபராசக்தி சித்தர் பீடம்

மேல்மருவத்தூர்

# சிறப்பு விழாக்கள் 2011

| | | | | |
|---|---|---|---|---|
| தை | 19 | 02.02.2011 | புதன் | ● அமாவாசை – வேள்வி |
| மாசி | 6 | 18.02.2011 | வெள்ளி | O பௌர்ணமி |
| மாசி | 19 | 03.03.2011 | வியாழன் | ஆன்மிக குரு அருள்திரு அம்மாவின் 71ஆவது அவதாரத் திருநாள் |
| மாசி | 20 | 04.03.2011 | வெள்ளி | ● அமாவாசை - வேள்வி |
| பங்குனி | 5 | 19.03.2011 | சனி | O பௌர்ணமி |
| பங்குனி | 20 | 03.04.2011 | ஞாயிறு | ● அமாவாசை – வேள்வி |
| சித்திரை | 04 | 17.04.2011 | ஞாயிறு | O சித்திரை பௌர்ணமி |
| சித்திரை | 19 | 02.05.2011 | திங்கள் | ● அமாவாசை – வேள்வி |
| வைகாசி | 3 | 17.05.2011 | செவ்வாய் | O பௌர்ணமி |
| வைகாசி | 18 | 01.06.2011 | புதன் | ● அமாவாசை – வேள்வி |
| வைகாசி | 32 | 15.06.2011 | புதன் | O பௌர்ணமி |
| ஆனி | 15 | 30.06.2011 | வியாழன் | ● அமாவாசை – வேள்வி |
| ஆனி | 16 | 01.07.2011 | வெள்ளி | ● அமாவாசை |
| ஆனி | 30 | 15.07.2011 | வெள்ளி | O பௌர்ணமி |
| ஆடி | 14 | 30.07.2011 | சனி | ● அமாவாசை – வேள்வி |
| ஆடி | 16 | 01.08.2011 | திங்கள் | 40ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 17 | 02.08.2011 | செவ்வாய் | 40ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 28 | 13.08.2011 | சனி | O பௌர்ணமி |
| ஆவணி | 12 | 28.08.2011 | ஞாயிறு | ● அமாவாசை – வேள்வி |
| ஆவணி | 26 | 12.09.2011 | திங்கள் | O பௌர்ணமி |
| புரட்டாசி | 10 | 27.09.2011 | செவ்வாய் | ● அமாவாசை – வேள்வி |
| புரட்டாசி | 11 | 28.09.2011 | புதன் | நவராத்திரி ஆரம்பம் |
| புரட்டாசி | 24 | 11.10.2011 | செவ்வாய் | O பௌர்ணமி |
| ஐப்பசி | 9 | 26.10.2011 | புதன் | ● அமாவாசை வேள்வி, தீபாவளி |
| ஐப்பசி | 24 | 10.11.2011 | வியாழன் | O பௌர்ணமி |
| கார்த்திகை | 8 | 24.11.2011 | வியாழன் | ● அமாவாசை – வேள்வி |
| கார்த்திகை | 9 | 25.11.2011 | வெள்ளி | ● அமாவாசை |
| கார்த்திகை | 22 | 08.12.2011 | வியாழன் | கார்த்திகை தீபம் |
| கார்த்திகை | 24 | 10.12.2011 | சனி | O பௌர்ணமி |
| மார்கழி | 8 | 24.12.2011 | சனி | ● அமாவாசை – வேள்வி |
| மார்கழி | 9 | 25.12.2011 | ஞாயிறு | கிறிஸ்மஸ் |

## படகும் - பாவனையும்:

“ஒரு படகில் இரண்டு பக்கமும் உட்கார்ந்திருப்பவர்கள் நான்கு நான்கு பேர் துடுப்புப் போட்டுத் தள்ளினால் தான் படகு வேகமாகச் செல்லும், கரையும் சேரும். துடுப்பினை வைத்துக்கொண்டு தள்ளுவதுபோல பாவனை செய்தால் படகு வேகமாகவும் செல்லாது. கரையும் சேராது. அதுபோல ஆன்மிகத்திற்கு வந்துவிட்ட நீங்கள் உண்மை உணர்வுடன், உள்ளன்போடும் தொண்டு செய்தால் கரை சேரலாம். தொண்டு செய்வது போல பாவனை செய்தால் நீங்கள் முன்னேறவும் முடியாது. கரை சேரவும் முடியாது.

உங்கள் பூர்வ புண்ணியக் கணக்கை வைத்து உங்களுக்குச் சில பொறுப்புகள் அளிக்கிறேன். அவற்றைப் பொறுப்போடு செய்யாமல் பாவனை பண்ணினால் பாவந்தான் மிஞ்சும்.”.

-அன்னையின் அருள்வாக்கு

மேல்மருவத்தூர் வரலாற்றிலிருந்து.....

## மேல்மருவத்தூர் வரலாற்றிலிருந்து.....

## மீட்டப்படும் நிகழ்வுகளும் - வாய்ப்புக்களும்

### பெப்ரவரி

| | |
|---|---|
| 09.02.1979 | அதர்வண பத்ரகாளி திருக்கோயில் நிறுவப்பட்டது. |
| 27.02.1986 | மேல்மருவத்தூர் இரயில் நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டு ரயில்கள் மேல்மருவத்தூரில் நின்று செல்லத் துவங்கின. |
| பெப்ரவரி 1986 | அடிகளார் பிறந்தநாள் விழாவையொட்டி மதுரை அரவிந்த் மருத்துவமனை உதவியுடன் கண் சிகிச்சை முகாம் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் தொடர்கிறது. |

***

# திருமதி பதில்கள்



- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

**பல உடல் வேதனைகளால் தீய எண்ணங்கள் என் மனதை பயமுறுத்திக்கொண்டே உள்ளன. நானும் அம்மா நாமம் சொல்லியுள்ளேன். இன்னும் எனக்கு பயம் வந்துகொண்டே உள்ளது. தயவுகூர்ந்து எனக்கு ஒரு நல்வழி காட்டுங்கள் தாயே!**

அம்மாவையே முழுமையாக நம்புங்கள். தன்னம்பிக்கையோடு தைரியமாக இருங்கள். உங்கள் மனத்தில் தீய எண்ணங்கள் ஏற்படும்போது நீங்களே அதை உதறித் தள்ளிவிடுங்கள். அம்மா இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று கவனத்தை வேறு திசைக்கு மாற்றுங்கள். எல்லாம் சரியாகிவிடும்.

**ஐம்புலன்களை ஒருமுகப்படுத்தினால் வாழ்க்கையின் நோக்கம் என்ன? பொருள் என்ன?**

ஐம்புலன்களை ஒருமுகப்படுத்துவதால் மனம் அலைபாயாமல் அமைதியடைகிறது. பொறாமை, ஆசை, கோபம் போன்ற தீய எண்ணங்கள் தோன்றாமல் மனம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. நல்ல எண்ணங்கள் தோன்றி ஒழுக்கமான வாழ்க்கை வாழ முடிகிறது. மனக்கட்டுப்பாட்டால் வர இருக்கும் துன்பங்களைத் தள்ளிப்போடவும் முடியும். தவிர்க்கவும் முடியும்.

**எங்கள் வீட்டில் மாரியம்மனுக்கு வேண்டி ஒவ்வொரு வருடமும் தை மாதம் அன்னதானம் செய்கின்றோம். இந்த வருடம் முதல் அன்னதானம் செய்து முடித்த பின், மன்ற சக்திகள் அனைவரையும் அழைத்து வழிபாடு செய்யலாமா?**

மாரியம்மன் பண்டிகையின்போதே அம்மா படத்தையும் வழிபாடு செய்து சக்திகளையும் உடன் வைத்துக்கொண்டு அன்னதானம் செய்யலாம். தவறேதும் இல்லை.

**ஆவணம் : திருமதி அம்மா எழுதிய திருமதி பதில்கள் நூல்**

# ஆன்மிக நாட்குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 06.02.2011 | ஞாயிறு | தை | 23 | **"தைப்பூச ஜோதி"** ஏற்றலும் தரிசனமும்-மெல்போர்ண்<br>- மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு அதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 11.02.2011 | வெள்ளி | தை | 28 | தை கார்த்திகை |
| 18.02.2011 | வெள்ளி | மாசி | 06 | மாசிமகம்<br>**பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>-ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 20.02.2011 | ஞாயிறு | மாசி | 08 | **திருவிளக்குப் பூஜை**<br>- ஆதிபராசக்தி மெல்போர்ண் மன்றம்-அவுஸ்திரேலியா |
| 02.03.2011 | புதன் | மாசி | 18 | மகா சிவராத்திரி |
| 03.03.2011 | வியாழன் | மாசி | 19 | அருள்திரு அம்மாவின்<br>71ஆவது அவதாரத்திருநாள்<br>- மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு அதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 05.03.2011 | சனி | மாசி | 21 | **கலச வேள்வி விளக்குப்பூஜையும்**<br>**அருள்திரு அம்மாவின் 71ஆவது**<br>**அவதாரத்திருநாள் பெருவிழாவும்**<br>- ஆதிபராசக்தி மெல்போர்ண் மன்றம்-அவுஸ்திரேலியா |
| 12.03.2011 | சனி | மாசி | | ஸ்ரீ விவேகானந்தா சுவாமிகள் ஜயந்தி (147) |
| 19.03.2011 | சனி | பங்குனி | 05 | பங்குனி உத்திரம்<br>**பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>-ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 20.03.2011 | ஞாயிறு | பங்குனி | 06 | **திருவிளக்குப் பூஜை**<br>- ஆதிபராசக்தி மெல்போர்ண் மன்றம்-அவுஸ்திரேலியா |
| 12.04.2011 | செவ்வாய் | பங்குனி | 29 | ஸ்ரீராம நவமி |
| 14.04.2011 | வியாழன் | சித்திரை | 01 | ஸ்ரீகர தமிழ் வருடப்பிறப்பு |
| 17.04.2011 | ஞாயிறு | சித்திரை | 04 | **சித்திரை பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>- மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு அதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**சித்திரை பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>-ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம்<br>**சித்திரை பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>- ஆதிபராசக்தி மெல்போர்ண் மன்றம்-அவுஸ்திரேலியா |
| 17.05.2011 | செவ்வாய் | வைகாசி | 03 | **பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>-ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 22.05.2011 | ஞாயிறு | வைகாசி | 08 | **திருவிளக்குப் பூஜை**<br>- ஆதிபராசக்தி மெல்போர்ண் மன்றம்-அவுஸ்திரேலியா |
| 15.06.2011 | புதன் | வைகாசி | 32 | **பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>-ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 19.06.2011 | ஞாயிறு | ஆனி | 04 | **திருவிளக்குப் பூஜை**<br>- ஆதிபராசக்தி மெல்போர்ண் மன்றம்-அவுஸ்திரேலியா |
| 15.07.2011 | வெள்ளி | ஆனி | 30 | **குரு பூரணை தினம் - குரு பூர்ணிமா**<br>- மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு அதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>-ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 13.08.2011 | சனி | ஆடி | 28 | **பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>-ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 14.08.2011 | ஞாயிறு | ஆடி | 29 | **திருவிளக்குப் பூஜை**<br>- ஆதிபராசக்தி மெல்போர்ண் மன்றம்-அவுஸ்திரேலியா |
| 01.09.2011 | வியாழன் | ஆவணி | 15 | ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி |
| 12.09.2011 | திங்கள் | ஆவணி | 26 | **பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>-ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 18.09.2011 | ஞாயிறு | புரட்டாசி | 01 | **திருவிளக்குப் பூஜை**<br>- ஆதிபராசக்தி மெல்போர்ண் மன்றம்-அவுஸ்திரேலியா |